**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 09-01-2025

SC. 239/2022

PW1 – **வீரமணி**.

2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ம் நாள் **வீரமணி** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி, தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **வீரமணி** | தந்தை பெயர் | **சின்னப்பையன்** |
| வயது | 27 | கிராமம் | கல்லாகரம் |
| வட்டம் | பாலக்கோடு | மாவட்டம் | தர்மபுரி |

முதல் விசாரணை : –

நான் தற்போது பத்தளப்பள்ளியில் உள்ள பாஸ்கர் தாஸ் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் வழக்கறிஞர் அலுவலத்தில் டைப்பிஸ்ட்டாக வேலை பார்த்து வருகிறேன், கடந்த 16.06.2022 ம் தேதி இரவு 10.30 மணியளவில் நான் மட்டும் எனக்கு சொந்தமான TN –29 CW5281 SWIFT DESIRE காரில் சொப்பட்டி கிராமத்திற்கு எனது நண்பர் மணிவண்ணனை பார்ப்பதற்காக சென்றேன். அப்பபோது கனத்தைமழை பெய்து கொண்டிருந்ததது. அதனால் காரை என்னால் ஓட்ட முடியாமல் G Squre Layout – ல் சுமார் இரவு 11.00 மணியளவில் நிறுத்திவிட்டு முகப்பு விளக்குகளை ஒளிர விட்டு காரில் அமர்ந்திருந்தேன். அப்போது திடீரென்று வந்த 2 நபர்கள் காரின் கண்ணாடியை தட்டினார்கள், ஏதாவாது அவசரம் இருக்கும்மென்று நினைத்து கார் கண்ணாடியை இறக்கி விட்டு பார்த்தபோது அந்த 2 நபர்களில் ஒருவர் எனது கையில் இருந்த அலைபேசியை தட்டிவிட்டு மற்றொரு நபர் அந்த அலைபேசியை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார். சாட்சி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள 1 வது எதிரி முஸ்ரப்பை அடையாளம் காட்டி அவர் தான் அலைபேசியை தட்டி விட்டார்

என்றும் , 2 வது எதிரி ஆரிப் அலி அடையாளம் காட்டி அவர் அலைபேசியை எடுத்துக்கொண்டு ஓடினார் என்றும் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கிறார். திடீரென்று அவர்கள் அலைபேசியை தட்டி விட்டு எடுத்துக்கொண்டு ஓடியதால் காரை அப்படியே விட்டு விட்டு அவர்களை துரத்தி ஓடினேன். 100 மீ தொலைவில் 1, 2 எதிரிகள் எனது அலைபேசியில் யாரிடமோ பேசிக்கொண்டிருந்தார். அவர்கள் இருவரையும் நான் பிடித்தபோது மேலும் இரு நபர்கள் வந்து என்னை தோள்பட்டையுடன் சேர்த்து பிடித்துக்கொண்டார்கள்., அவ்வாறு தோள்பட்டையுடன் பிடித்து கொண்ட ஒருவர் தான் 3 ம் எதிரி என்று 3 ம் எதிரியை சாட்சி அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கிறார். மற்றொரு எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றும் அவரை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும் என்றும் சாட்சி சொல்கிறார். ( 4 ம் எதிரி இன்று நீதிமன்றதில் ஆஜாராகததால் அவருக்காக கு,வி. மு. ச 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. ) பணம் 20000/- கொடு இல்லாவிட்டால் இங்கியே கொன்று புதைத்து விடுவோம் என்று நான்கு எதிரிகளும் என்னை மிரட்டினார்கள் . நான்கு பேரும் என்னை கைகளாலும, கால்களாலும் , வலது தோள்பட்டை , தலை, வலது கால் , முட்டி ஆகியவற்றில் அடித்து உதைத்தார்கள். காயம் எனக்கு அதிகமாக ஏற்பட்டது. 2 ம் எதிரி கிரிக்கெட் பேட்டாலும் , 3 ம் எதிரி கத்தியாலும் என்னை தாக்கினார்கள். 1 ம் எதிரி கட்டையால் என்னை அடித்தார். இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லாத எதிரியும் கையில் கத்தி வைத்திருந்தார். என்னை எதிரிகள் அடித்து உதைத்து மிரட்டியதால் நான் உயிருக்கு பயந்து எனது அலைபேசியில் ரூ. 15000/- இருக்கிறது அதை வேண்டுமானால் எடுத்து கொண்டு என்னை உயிரோடு விட்டுவிடுங்கள் என்று அவர்களிடம் கெஞ்சினேன். அதன் பின்பு அவர்கள் எனது அலைபேசியை என்னிடம் கொடுத்து அலைபேசி எண் 9042772799 என்ற எண்ணிற்கு பணத்தை அனுப்ப சொன்னார்கள். நான் அதன்படி அந்த அலைபேசி எண்ணுக்கு பணத்தை அனுப்பினேன். அதன் பின்பு மீண்டும் ரூ. 10000/- கொடு அப்போது தான் உன்னை விடுவோம் என்று மிரட்டினார். அந்த

தொகை என்னிடம் இல்லை என்று சொன்னேன். நீங்கள் எவ்வளவு மிரட்டினாலும் என்னிடம் காசு இல்லை என்றேன். அதன் பின்பு 2 ம் எதிரியும், இன்று நீதிமன்றத்தில் ஆஜாரில் இல்லாத 4 ம் எதிரியும் என்னை கீழே தள்ளி விட்டு காலாலும் கையாலும் அடித்து உதைத்தார்கள். பேட்டால் தாக்கியதில் எனக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. 4 ம் எதிரி என்னை நோக்கி கத்தியை வீசியபோது நான் விலகி விட்டதால் அந்த கத்தி எனது மூக்கு பகுதியை கிழித்து காயம் ஏற்படுத்தியது. அதனால் இரத்த காயம் ஏற்பட்டது. எதிரிகளிடம் இருந்து எப்படியாவது தப்பிக்க வேண்டும் என்று நான் முயற்சி செய்து கொண்டிருந்தேன். நான் கத்தியதில் அங்கிருந்த சிலர் ஓடி வந்தார்கள். எதிரிகள் என்னை அடித்து போட்டு விட்டு எனது அலைபேசியை அங்கேயே போட்டு விட்டு எனது காரை எடுத்து கொண்டு ஓடி விட்டார்கள். அதன் பிறகு எனது அலைபேசியை எடுத்து எனது நண்பர் சக்திவேலுக்கு தகவல் தெரிவித்து அவரை வரவைத்தேன் அவர் என்னை அவரது பைக்கில் மத்திகிரியில் உள்ள மருத்துவமனைக்கு இரவு சுமார் 11.40 மணியளவில் அழைத்து சென்றார். எனக்கு தலையிலும் மூக்கிலும் பலத்த காயம் ஏற்பட்டிருந்ததால் என்னுடைய அண்ணன் விஜயன் ஓசூரில் உள்ள காவேரி மருத்துவமனையில் மறுநாள் காலை 04.30 முதல் 5.30 மணியளவில் மேல்சிகிச்சைக்காக சேர்த்தார். அதன் பின்பு மத்திகிரி காவல் நிலையத்தில் இருந்து என்னை விசாரித்தார்கள் நான் வாக்குமூலம் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் தான் என்னிடம் காண்பிக்கப்படுவதாகும். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ 1** ஆகும். அதன்பேரில் போலிசார் வழக்கு பதிவு செய்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் உள்ள ஆயுதங்களான கட்டை , கிரிக்கெட் பேட், 2 கத்தி ஆகியவற்றால் தான் எதிரிகள் தாக்கியதாக சாட்சி ஆயுதங்களை அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கிறார் . உருட்டு கட்டை ஒன்று **சா.பொ 1** ஆகும் ,கிரிக்கெட் பேட் ஒன்று **சா.பொ** 2 ஆகும், இரும்பு கொடுவாள் இரண்டு **சா.பொ 3** மற்றும் , **சா.பொ 4** ஆகும். போலிசார் எதிரியிடம் இருந்து கைப்பற்றிய பணம் ரூ. 10000 /- ஐ நீதிமன்றதில் ஆஜர் படுத்தினார்கள் , அதை நான் மனு தாக்கல் செய்து பெற்று

கொண்டேன். பின்பு எனது காரையும் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். எனது காரை இன்று சாட்சியம் அளிக்க கொண்டு வரவில்லை. பின்பு தருமபுரியில் உள்ள சிறையில் வைத்து நீதிபதி முன்பு எதிரிகள் நால்வரையும் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டினேன். 3 முறை அடையாளம் காட்டினேன் என்கிறார்.

சாட்சி அவரது காரை ஆஜர் படுத்தும் பொருட்டும், சாட்சி திரும்ப பெற்று சென்ற பணத்தை குறியீடு செய்யும் பொருட்டும் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur